பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 17 சனிக்கிழமை (02-11-1996) UTHAYAN A Lively Nationel Tamil Daily கதிர் 259

# வன்னியில் இடம்பெயர்ந்தோரை வவுனியாவுக்கு வர அரசு அழைப்பு!

## மற்றொரு இராணுவ நடவடிக்கைக்கு முன்னோடி ஏற்பாடு என ஊகம்

வவுனியா, நவம்பர் 2

கிளிநொச்சியில் நடத்தப்பட்ட 'உண்மை வெற்றி' இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெயர்ந்த மக்களை வவுனியாவுக்கு வருமாறு அரசாங்கம் தொடர்ந்து அழைப்பு விடுத்து வருகிறது.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சி வரை பாதையைத் திறக்கும் பொருட்டு பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் மக்களை இந்தப்பக்கம் வரச் செய்வதே அரசின் திட்டம் என்று கூறப்படுகிறது.

தாண்டிக்குளத்தில் கெடுபிடிகள் தளர்த்தப்பட்டதாலும் இங்கு வருவோருக்குத் தங்குமிட வசதிகள் செய்யப்படுவதாலும் மக்கள் பெருமளவில் வருவர் என்று அரசு நம்புகிறது.

அரசு எதிர்பார்த்தது போலவே ஆயிரக் கணக்கான மக்கள் தாண்டிக்குளத்தைத் தாண்டி நாளாந்தம் வவுனியாவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

எனினும் தாண்டிக்குளம், நொச்சிமோட்டைக் கடுபிடிகள் நலன்புரி நிலையங்களுக்கு மாற்றப்படலாம் என்ற அச்சம் இவர்களுக்கு உண்டு என

(8 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருள்களுடன் 4 வள்ளங்கள் கடத்தல்!

### மன்னார் பகுதியில் சம்பவம்

கொழும்பு, நவ. 2

கற்பிட்டியில் இருந்து மன்னாருக்குச் சென்றுகொண்டிருந்த நான்கு வள்ளங்கள் சுமார் 40 லட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருள்களுடன் கடத்தப்பட்டுள்ளன.

உணவுப் பொருள்களை ஏற்றிச்செல்லும் வள்ளங்களுக்கு கடற்படை பாதுகாப்பு அளிப்பது வழக்கமாகும்.

எனினும் இந்த வள்ளங்கள் பாதுகாப்பு இன்றிச் சென்றுகொண்டிருந்த சமயமே கடத்தப்பட்டன என்றும் —

விடுதலைப் புலிகளே இந்த வள்ளங்களைக் கடத்தி இருக்கலாம் என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது. (இ-3)

## அராலி சுற்றிவளைப்பு

அராலியில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினர் ஆயுதங்கள், வெடிமருந்துகள் ஆகியவற்றைக் கண்டு பிடித்துள்ளனர் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

ரி- 56 ரக துப்பாக்கிகள், கிளைமோர் கண்ணி வெடிகள், சன்னங்கள் ஆகியனவும் இவற்றில் அடங்கும் என்றும் —

இவைதவிர மின்சாரத்தில் இயங்கக்கூடிய வெடிக்கும் கருவிகள், மிதிவெடி சுவிற்சுகள் ஆகியனவும் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

## தெற்கே செல்வதற்கு காத்திருக்கும் 10,000 பேர்

யாழ்ப்பாணத்தில் இருந்து தெற்கே செல்வதற்கு சுமார் 10 ஆயிரம் பேர் போக்குவரத்து வசதிக்காகக் காத்திருப்பதாக யாழ். சிவில் நிர்வாகத் தகவல்களில் இருந்து தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பல் மற்றும் விமானம் மூலம் கொழும்புக்கு பல்வேறு தேவைகளுக்குச் செல்வதற்கு சிவில் நிர்வாக அலுவலகத்தில் மக்கள் பதிவு செய்து வருகிறார்கள்.

நேற்று வரை பதிவு செய்தவர்களின் எண்ணிக்கையுடன் சேர்த்து சுமார் 10 ஆயிரம் பேர் கொழும்பு செல்லக் காத்திருப்பதாக சிவில் நிர்வாக அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

தினமும் 46 பயணிகள் வீதம் வாரத்தில் 6 நாள்களில் 276 பேரும் —

வாரம் ஒரு தடவை கப்பல் மூலம் 570 பேரும் மொத்தமாக வாரத்தில் 846 பேர் வரையில் அனுப்பப்படுவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இருமாத காலத்துக்குள் முழுப் பயணிகளும் செல்லக்கூடியதாக இருக்கும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## படையினருக்கு மன்னிப்பு வழங்கும் திட்டம் மீண்டும்

கொழும்பு, நவ. 2

இராணுவ சேவையில் இருந்து உரிய அனுமதியின்றி விட்டுச்சென்ற இராணுவத்தினருக்கு நேற்று முதல் மீண்டும் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இராணுவத்தளபதி றோகான் தலுவத்த இதனைத் தெரிவித்தார்.

கடந்த 10 வருடங்களில் 20ஆயிரம் படையினர் இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்றும் —

இப்படியானவர்கள் இரு வாரங்களுக்குள் சரண் அடைய அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

இதேபோன்ற பொது மன்னிப்பு வழங்கும் அறிவிப்பு முன்னரும் விடுக்கப்பட்டது தெரிந்ததே. (இ- 3)

## 21 மீனவர்கள் விடுவிப்பு

படையினரிடம் சிக்கிய 21 மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த 30 ஆம் திகதி காக்கைதீவுக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற இவர்கள் கடற்படையினரைக் கண்டு அஞ்சி அல்லைப்பிட்டிக்குச் சென்று கரையேறியதாகவும் —

பின்னர் அடுத்தநாள் அவர்கள் அல்லைப்பிட்டி இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-145)

## குடாநாட்டில் நேற்று பகிஷ்கரிப்பு.

யாழ்ப்பாணம், நவ. 2

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மாணவர்களின் பகிஷ்கரிப்பு இயக்கம் நேற்று முழு அளவில் நடைபெற்றது.

பாடசாலைகள் மாணவர் வரவின்றி வெறிச்சோடிக் கிடந்தன. ஆசிரியர்களை மட்டுமே அங்கு காண முடிந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

பகிஷ்கரிப்புக் காரணமாக மாவட்டத்தில் மக்கள் மத்தியில் பதற்ற உணர்வு நிலவியிருந்தது. வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்தது

யாழ்ப்பாண நகரத்தைப் பொறுத்தளவில் யாழ். செயலகம், கல்வித் திணைக்களம் உட்பட அரச அலுவலகங்களுக்கு ஊழியர்கள் மிகக் கணிசமான அளவில் வந்திருந்தனர். வங்கிகளும் இயங்கின. ஆனால் பொது மக்கள் வருகை இருக்கவில்லை.

யாழ் நகரப் பகுதியில் உள்ள கடைகள் நேற்றுக் காலையில் மூடப்பட்டிருந்தன.

கடைகளைத் திறக்குமாறு படையினர் ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்தனர். கடைகள் சிலவற்றின் பூட்டுக்கள் உடைக்கப்பட்டதாகவும் தெரியவந்தது

நண்பகலின் பின்னர் நகரில் பெரும்பாலான கடைகள் திறந்து வைக்கப்பட்டிருந்தன.

(8ஆம் பக்கம்பார்க்க)

## ஜே. ஆர். காலமானார்

கொழும்பு, நவ. 2

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது 90 ஆவது வயதில் நேற்று கொழும்பில் காலமானார்.

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த இவர் புற்று நோயால் பாதிக்கப்பட்டு கொழும்பு நவலோக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

1940 ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்த ஜே. ஆர். 1970 ஆம் ஆண்டு நாடாளு மன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்.

1977 இல் பிரதமராகவும் பின்னர் புதிய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதியாகவும் பதவி வகித்தார்.

1957ஆம் ஆண்டு பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து கண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### பூனைத்தொடுவாயில் புலிகளின் ராடர் நிலையத்தை அழிக்கும் படை நடவடிக்கை வெற்றிபெற்றதா?

கடந்த 20 ஆம் திகதி நடந்த முப்படைகளின் கூட்டு நடவடிக்கை பற்றிய விறுவிறுப்பான கட்டுரைத் தொடர் நாளை ஆரம்பம்!

## ரோந்து சென்ற படையினர் மீது பொலன்னறுவை பகுதியில் தாக்குதல்

### மூவர் உயிரிழந்தனர்

கொழும்பு, நவ. 2

பொலன்னறுவை மாவட்டத்தில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் [illegible] படையினர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை மாவட்டம் மனலாறுக்கு அப்பால் மகாவலிபுரத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ரோந்து சென்ற படையினர் மீதே புலிகள் தாக்குதல் நடத்தினர் என்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

இந்த தாக்குதல் குறித்து மேலதிக விவரம் கிடைக்கவில்லை. (இ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்

02-11-96 இன்று 70 ஆவது வயதில் காலடி எடுத்து வைக்கும் சுவாமி சிவானந்தரின் அடியாரான திருவாளர் க. கனகராசா அவர்களை, குருதேவர் சிவானந்தரின் அருளால் மன அமைதியும் ஆனந்தமும் பெற்று வாழப் பிரார்த்திக்கின்றோம்.

சிவானந்தர் சிறுவர் சமய
பாடசாலைப் பொறுப்பாளரும்
ஆசிரியர்களும்.

(சி/3397)

## இலங்கை மின்சார சபை

### 1997 ஆம் ஆண்டுக்கான

சேவைகளையும் வழங்கல்களையும்
மேற்கொள்வதற்காக

### பதிவு செய்தல்

வட மாகாணத்தில் இ. மி. சபையின் பிரதேச பொறியியலாளர் யாழ்ப்பாணம், பிரதேச பொறியியலாளர் கிளிநொச்சி என்பவற்றுக்கு தங்களது சேவைகளையும், பொருள்களையும் வழங்குவதற்காக தம்மைப் பதிவுசெய்து கொள்ள விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருள்கள் :

01. மின்சார பாதுகாப்பு உபகரணங்கள்
02. சேகிற் பிறேக்கர்கள், கட் அவுட், மின்சார உபகரணங்கள் போன்றவை.
03. பாதுகாப்பிடப்பட்ட கேபிள், அலுமினிய மின் கம்பி.
04. மின் விசிறிகள், புளரசன் லைட், மின்குமிழ்கள், மின்கருவிகள்.
05. கட்டடப் பொருள்கள், இரும்புத் தளபாடங்கள், தீந்தைகள்.
06. சிறிய மின் கருவிகள், அளக்கும் கருவிகள்
07. மின் மார்க்கங்களுக்கு பாவிக்கும், குறஸ்ஆம், ஸ்ரேய்ஸ், 'டி' பிறக்கட், ஜி. ஐ. ஆணி, நட்டுக்கள், வாசர்கள் போன்றவை.
08. அலுவலக எழுது பொருள்கள், உபகரணங்கள்
09. டயர்கள், ரியூப்புகள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள்.
10. அலுவலக தளபாடங்கள்.
11. மானி பலகைகள், மானி பெட்டிகள்.
12. வலுவூட்டப்பட்ட கொங்கிறீற் தூண்கள்.

சேவைகள்

01. அச்சிடல்
02. மோட்டார் வாகனம் திருத்தல்.
03. ரிங்கரிங், ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்
04. குறோஸ் ஆம், மின் மாற்றிகளுக்கு தீந்தை பூசுதல்
05. மின்மாற்றிகள், உலோகப் பொருள்கள், மின்கம்பிகள் என்பவற்றை ஏற்றிச் சென்று இறக்கல்.
06. புதிய கட்டடங்களும் கட்டடங்களை பராமரித்தல்.
07. மின்மார்க்க வழிகளை துப்புரவு செய்தல்.
08. வீதி மின் விளக்குகளை பராமரித்தல்-
09. பாரங்குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல்.
10. அரசு அலுவலகங்களில் புள்ளி அடிப்படையில் உள்ளக மின் இணைப்புகள்.

நிபந்தனைகள்:-

01. பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு). இலங்கை மின்சாரசபை, 536/1, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியிலும், பிரதேச மின் பொறியியலாளர் இலங்கை மின்சார சபை பூங்கா வீதி, வவுனியா என்ற முகவரியிலும் 1996-11-04 ஆம் திகதியிலிருந்து விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும். படிவக்கட்டணமாக ரூபா. 250/- செலுத்திப்பெறப்பட்ட மாதிரிப் படிவத்தில் மட்டுமே விண்ணப்பம் செய்யப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மேற் கூறப்பட்ட அலுவலகத்தில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.
02. பொருள்கள் / சேவைகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாக மீளளிப்புச் செய்யக் கூடிய வைப்புப்பணமாக ரூபா 1000/- அறவிடப்படும். பொது முகாமையாளர், இ. மி. ச., கொழும்பு என்பவருக்கு எடுக்கப்பட்ட காசுக்கட்டளை அல்லது வங்கி ஆணை மூலம் மேற்கூறப்பட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்களுடன் கையளிக்கப்பட வேண்டும்.
03. விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும் திகதி **1996 - 11 - 25.**
04. விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் திகதி **1996 - 11 - 27.**

பிரதிப் பொது முகாமையாளர்,
வட மாகாணம்.

பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் (வடக்கு)
இலங்கை மின்சார சபை,
பூங்கா வீதி,
வவுனியா.

(சி/3395)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 2

ஸ்ரீவித்யா ஸபர்யா பத்ததி (ஸ்ரீசக்கர பூஜை) என்னும் சமஸ்கிருத நூல் இன்றுகாலை சுதுமலை ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் வெளியிட்டு வைக்கப்படும்.

வெளியீட்டு விழாவுக்கு யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ணஐயர் தலைமை வகிப்பார்.

சிவஸ்ரீ ச. மகேஸ்வரக் குருக்கள் தம்பதிகளின் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழாவை யொட்டியே இந்நூல் வெளியிடப்படுகிறது. (அ-30)

## ஜே. ஆர். கண்தானம்

நேற்று மரணமான ஜே ஆர். ஜெயவர்த்தனாவின் இரு கண்களும் தானம் செய்யப்பட்டுள்ளன என்று கொழும்பு கண் வங்கிப் பணிப்பாளர் ஹட்டன் சில்வா தெரிவித்தார்.

ஒரு கண் ஜப்பானுக்கு அனுப்பப்படும் என்றும், மற்றைய கண் சேகரித்து வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## 3 கப்பல்கள் நாளை வருகின்றன

யாழ்ப்பாணம், நவ. 2

திருகோணமலையில் இருந்து 3 கப்பல்களில் ஒரு தொகுதி பயணிகள் நாளை காலை காங்கேசன்துறை வர உள்ளனர்.

அதேபோன்று இங்கிருந்தும் ஒரு தொகுதி பயணிகள் இதே கப்பல்களில் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

கப்பலில் பயணம் செய்ய சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் 82 ஆவது பட்டியலுக்கு உட்பட்டவர்களை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

## மாடுகளால் பயிர்கள் அழிவு

யாழ்ப்பாணம், நவ. 2

வடமராட்சி உபய கதிர்காமம் பகுதியில் கால்நடை வளர்ப்போர் இரவில் அவற்றைக் கட்டுவது இல்லை என்றும் —

இதனால் இரவில் வயல் நிலங்களுக்குள் பிரவேசிக்கும் மாடுகள் பயிர்களை மேய்ந்து பெரும் அழிவை ஏற்படுத்துகின்றன என்றும் — தெரிவிக்கப் படுகின்றது.

அதிக விலைக்கு விதை நெல்லை வாங்கி விதைத்து விட்டு, மழையும் இல்லாமல் ஏங்கிக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு இது பெரும் வேதனையை அளிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## கொழும்பில் கண்நோய்

கொழும்பு நவ. 2

''கொன்ஜன்திவைட்'' என்னும் கண்நோய் தற்போது கொழும்புப் பகுதியில் பரவி வருகிறது.

இந்நோய் மிகவிரைவில் பரவக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக இலங்கை கண்தான இயக்கம் தெரிவித்துள்ளது.

இந்தநோய் 4 அல்லது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையே பரவுகிறது எனவும்—

இதனைக் குணப்படுத்த மருந்து கிடையாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோய் கண்டவர்களுக்கு கண் சிவந்து கண்ணீர் வடியும் என்றும் 6 அல்லது 7 நாட்கள் ஓய்வெடுக்க இந்நோய் தானாக மாறிவிடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

## யாழ். மாநகராட்சி மன்றம்

## முக்கிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் பழைய அல்லது புதிய கட்டடங்கள், மதில்கள் போன்றவற்றை அமைக்கவோ அல்லது திருத்தவோ விரும்புவோர் மாநகரசபையின் கட்டடப் பிரிவுடன் தொடர்புகொண்டு உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அதனை மீளச் சமர்ப்பித்து அதற்கான அங்கீகாரத்துடன் அமைப்பதன் மூலம் எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1996-11-01

(சி/3399)

## மரண அறிவித்தல்கள்

### நாகமுத்து பொன்னையா

பெரியவிளானைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் கனகசபை றோட்டை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து பொன்னையா 1 - 11 - 96 அன்று காலமானார்.

இவர் தங்கமுத்துவின் அன்புக் கணவரும், திருமதி மகேஸ்வரி (ராணி, ஸ்ரீதர் சினிமா உரிமையாளர்), காலஞ்சென்ற சபாரத்தினம் (ராணி சினிமா முகாமையாளர்), டாக்டர் தர்மராஜசிங்கம், யோகரத்தினம் (ஜேர்மனி), மனோரஞ்சிதம் (கொழும்பு), ராஜரத்தினம், தளையசிங்கம் (லண்டன்), சிவராஜரத்தினம், பராசக்தி (கொழும்பு), ஈஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்ற இரத்தினசபாபதி (ஸ்ரீதர். ராணி சினிமா), பத்மாவதி (ஜேர்மனி), காலஞ்சென்ற நாகேஸ்வரி, தவமணி (ஜேர்மனி), குணரத்தினம் (கொழும்பு), ஆத்தை, பத்மாவதி (லண்டன்), பரமேஸ்வரி (மட்டக்களப்பு), காலஞ்சென்ற மகேஸ்வரன் (அசோசியஸ் சேவிஸ் மாஸ்டர், உரிமையாளர் தெமட்டக்கொடை) ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (2 - 11 - 96) சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் பிப்பிலி மயானத்தில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
P. ராஜாத்தினம்
P. சிவராஜரத்தினம் (சிவம்)
(மகன்மார்)

''ரவி வாசா''
கனகசபை றோட்,
மானிப்பாய்.

(8953)

### தம்பிஐயா வெற்றிவேலு

உசன்-பதியைச் சேர்ந்த தம்பிஐயா வெற்றிவேலு 1-11-96 வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும், சிவானந்தசோதி (மகாராஜா லிமிட்டெட்), காலஞ்சென்ற லீலாவதி, கருணநாதன் (கிராம அலுவலர்), தயாவதி (கனடா), பிரபானந்தன் (கனடா) ஆகியோரின் தந்தையும், பத்மதேவி, குகபாலன், சத்தியரூபவதி, கணேஸ்குமார் (கனடா), இந்திராணி (கனடா) ஆகியோரின் மாமனாருமாவார்.

தகனக்கிரியைகள் நேற்று (1-11-96) மாலை 2.30 மணியளவில் உசனில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கருணநாதன் (ஆனந்தன்)
(மகன்)

உசன்,
மிருசுவில்.

(8952)

### திருமதி மனோன்மணி விசுவலிங்கம்

வேலணை கிழக்கு 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மனோன்மணி விசுவலிங்கம் 31-10-96 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், வேலணை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட ராமலிங்கம்—பழனி ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், மாரிமுத்து—நாகமுத்து தம்பதிகளின் மருமகளும், விசுவலிங்கத்தின் அன்பு மனைவியும், முத்துலிங்கம், தங்கலிங்கம், கயிலாயபிள்ளை, சிவம், செல்வம் ஆகியோரின் அன்புத் தாயாரும், பாக்கியலட்சுமி, அனுசம்மா, கமலாதேவி, தேவி ஆகியோரின் அன்பு மாமியும், ஜெயமலர், ஜெயரூபன் (லண்டன்), ஜெயகரன் (லண்டன்), ஜெயதரன், சிவகஜனி, வர்ணசீலன், சுகுமார் கவிதாஸ், டஷிகா, டசீபன், றஜீதா, சஞ்ஜீபன், ரஜீபன், பிருந்தா, தீபா, நிரஞ்சலா, சஞ்ஜீபன் ஆகியோரின் பேர்த்தியும் சரவணமுத்து, மனோன்மணி, மாணிக்கம் காலஞ்சென்ற வள்ளியம்மை, செல்லப்பா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் 31-10-96 மாலை 4-00 மணியளவில் சாட்டி மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. முத்துலிங்கம்
(மகன்)

(43455)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் ஹஷிமோட்டோ மீண்டும் பிரதமராகலாம்!

ரோக்கியோ, நவ 2 ஜப்பானிய நாடாளுமன்றம் 7 ஆம் திகதி தொடக்கம் நடத்தவிருக்கும் ஆறு நாள் விசேட கூட்டத் தொடரில் ஹஷிமோட்டோ மீண்டும் பிரதமராகத் தெரிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பானிய அமைச்சரவை இதற்கான முடிவை எடுத்துள்ளது.

ஹஷிமோட்டோவின் லிபரல் ஜனநாயகக் கட்சி அதன் முன்னாள் கூட்டுக் கட்சிகளுடன் சேர்ந்து நேற்று அரசியல் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டுக்கட்சிகள் சிறுபான்மை அரசாங்கம் ஒன்றை அமைக்க ஹஷிமோட்டோவுக்கு ஆதரவை வழங்கவுள்ளன. (இ-10)

## முன்னாள் பொலீஸாருக்கு 200 ஆண்டு காலச் சிறை!

### தென் ஆபிரிக்க நீதிமன்றம் விதித்தது

ஜொகனஸ்பேர்க், நவ. 2 தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த முன்னாள் பொலீஸ் அதிகாரி ஒருவருக்கு 200 ஆண்டுகளுக்கு அதிகமான சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

யூஜன் டி கோக் என்ற இந்தப் பொலீஸ் அதிகாரி தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற வெள்ளையர் இனவாத ஆட்சிக் காலத்தில் அந்த ஆட்சி முறையை எதிர்த்தவர்களைப் படுகொலை செய்த மரணப்படைக்குத் தலைவராக விளங்கினார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

6 படுகொலைக் குற்றச் சாட்டுக்கள் உட்பட அவர் மீது சுமத்தப்பட்ட 89 குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக கடந்த ஒகஸ்ட் மாதம் இவர் குற்றவாளியாக நீதிமன்றத்தினால் காணப்பட்டார்.

தனக்கு விதிக்கப் பட்ட தண்டனையை எதிர்த்து யூஜன் டி கோக் மேல் முறையீட்டு நீதிமன்றத்துக்கு முறையீடு செய்துள்ளார். இருப்பினும் இது ஒரு அரசியல் பழிவாங்கல் என நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே மேல்முறையீட்டு நீதிமன்றம் இவருக்கு மன்னிப்பு வழங்கும். (இ-10)

## சசிகலா பிணை மனு மீண்டும் தள்ளுபடி

சென்னை நவ. 2 சசிகலாவின் பிணை மனுவை சென்னையிலுள்ள பொருளாதாரக் குற்ற விசாரணை நீதிமன்றம் மீண்டும் தள்ளுபடி செய்துள்ளது.

அந்நியச் செலாவணி முறைப்படுத்தல் சட்டத்தின் விதிகளை மீறியதாக சசிகலா அமுலாக்கப்பிரிவு இயக்குநர் அதிகாரிகளால் கடந்த ஒகஸ்ட் மாதம் கைது செய்யப்பட்டார். (இ-10)

## அஸாமில் படகு விபத்து 100 பேர் மரணம்?

அஸாம் மாநிலத்தில் கடந்த செவ்வாய் மாலை பிரமபுத்திரா ஆற்றில் இடம்பெற்ற படகு விபத்தில் சுமார் 100 பேர் ஆற்றில் மூழ்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தலைநகர் கௌகாட்டியிலிருந்து முக்கல் மோவா என்ற இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்த இயந்திரப்படகில் 130 பேர் இருந்தனர் என்று அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

35 பேர் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர். இறந்தோரைத் தேடும் பணிகள் நடைபெறுகின்றன. (இ-10)

## ராவ் உட்பட 7 பேர் மீது மற்றும் ஒரு வழக்கு

புதுடில்லி, நவ. 02 முன்னாள் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் 1993 ஆம் ஆண்டு ஜார்கண்ட் முக்தி மோட்சா கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வருக்கு லஞ்சம் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் தகுந்த ஆதாரங்கள் இருப்பதாக இந்திய புலனாய்வுத் துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த வழக்கில் நரசிம்மராவ் மற்றும் ஆறு பேர் மீது புதனன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

முன்னாள் மத்திய அமைச்சர்கள் கப்டன் சதீஷ் சர்மா பூட்டாசிங், ஜார்கண்ட் முக்தி மோட்சா தலைவர் சூரஜ் மண்டல் மற்றும் அக்கட்சி எம். பிக்களான சிவிசரன் சோரத், சைலேந்திர மகத்தோ, சைமன் மாறண்டி ஆகியோரே குற்றம் சுமத்தப்பட்ட மற்றைய ஆறு பேருமாவர்.

காங்கிரஸ் அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்த்து வாக்களிப்பதற்காக இக்கட்சியின் நான்கு எம். பிக்களுக்கும் லஞ்சம் வழங்குவதற்கு நடந்த சதிச்செயலில் நரசிம்மராவ் உட்பட ஏழு பேரும் சம்பந்தப்பட்டிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சூரஜ் மண்டல் 1993 ஒகஸ்ட் முதலாம் திகதி 160 லட்சம் ரூபா தொகையை புதுடில்லி வங்கி ஒன்றில் வைப்பிட்டதாகவும்—

சிலநாள்களின் பின் 30 லட்சம் ரூபாவை வேறு ஒரு வங்கியில் வைப்பிட்டதாகவும் —

இக்கட்சியைச் சேர்ந்த ஏனைய மூன்று உறுப்பினர்களும் இதேபோல பணங்களை முதலீடு செய்ததாகவும்— அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இத்தொகைகள் நரசிம்மராவிடம் இருந்து லஞ்சமாகப் பெறப்பட்டவை என்பதற்கு ஆதாரங்கள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உலக அரங்கில்

### வேலை நிறுத்தம் முடிவு

இந்தியாவில் நாடு முழுவதும் தபால் செய்தி, தொலைத்தொடர்பு சேவைகளை செயலிழக்கச் செய்த வேலை நிறுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தபால், தகவல் தொடர்பு துறை ஊழியர்களின் போனஸ் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்தே தொழிற் சங்கங்கள் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்துள்ளன. (இ-3)

# யாழ். செல்ல விரைவில் தரைப்பாதை திறக்கப்படும்

### ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, நவ. 2 ''வீதி வழியாக யாழ். செல்ல விரைவில் தரைப் பாதையும் திறக்கப்படும்''

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் 2ஆவது ஆண்டுப் பூர்த்தியையொட்டி ஹோமகமவில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த பகிரங்கக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கடந்த 13 வருடங்களாக புலிகள் இயக்கத்தின் அனுமதியின்றி எவரும் வவுனியாவுக்கு அப்பால் செல்ல முடியாதிருந்தது.

அந்த நிலை மாறி தற்பொழுது விரும்பியவர்கள் கப்பல் மூலம் அல்லது விமானம் மூலம் யாழ். சென்று வர வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்புப்படையினருக்கு அடிப்படை வசதிகளையும், ஆயுதங்களையும் பெற்றுக் கொடுத்ததன் மூலம் உலகில் அதிசக்தி வாய்ந்த புலிகள் இயக்கத்தை முறியடிக்கக் கூடியதாக இருந்தது.

யாழ். மாவட்டம் இப்பொழுது படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தின் 50 சத வீத நிலப்பரப்பு படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் 75 சதவீத மக்கள் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளில் வாழ்கின்றனர்.

தமிழ் மக்கள் அனைவரையும் நான் கொலை செய்வேன் என ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதனை ஓர் அதிகாரியிடம் நான் தெரிவித்ததாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் அந்த அதிகாரி யார் என்பது அச்செய்தியில் குறிப்பிடப்படவில்லை. எந்த அதிகாரியிடமும் அப்படி நான் தெரிவிக்கவில்லை. அந்த செய்தியில் எந்த விதமான உண்மையும் இல்லை. அந்தச் செய்தி திரித்து கூறப்பட்ட செய்தி ஆகும்.

தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கப் போவதாகக் கூறி சிலர் என்னையும் கொலை செய்ய திட்டமிட்டு வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட செய்தியை வெளியிட்ட அந்தப் பத்திரிகை மீது நான் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.

எனது கணவர் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் எழுப்பியதால் அவர் கொலை செய்யப்பட்டார். அவரை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவே திட்டமிட்டுக் கொலை செய்தார் என இது தொடர்பான விசாரணை ஆணைக்குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அந்த அறிக்கையின் பிரதிகள் தற்போது விற்பனைக்கு உள்ளன.

இப்படி ஜனாதிபதி மேலும் கூறினார். [இ-3]

## நன்கொடை பெற சன சமூக நிலையங்களை விண்ணப்பிக்கக் கோரிக்கை

யாழ், மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் தமது விவரங்களை எதிர் வரும் 10 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பித்து 95, 96 ஆம் ஆண்டுகளுக்குரிய நன்கொடையைப் பெறுமாறு மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் கேட்டுள்ளார்.

சனசமூக நிலையங்கள் நிர்வாகிகள் பட்டியல், வருடாந்த பொதுக் கூட்டறிக்கை, வங்கிக் கணக்கு ஆகியவற்றை சமர்ப்பிக்குமாறும் —

புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படாதவிடத்து கடந்த கால நிர்வாகிகள் பட்டியலைச் சமர்ப்பிக்கலாம் என்றும் — அவர் தெரிவித்தார்.

நன்கொடையைப் பெற ஒரு சில சன சமூக நிலையங்களே விண்ணப்பித்துள்ளன என்றும் —

வேறு சனசமூக நிலையங்கள் விண்ணப்பிக்காது விட்டால் கிடைத்த நிதி இவற்றுக்கு பகிர்ந்து அளிக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ3-30)

## தபால்சேவைக்கு ஆட்களை திரட்ட நேர்முகப் பரீட்சை

குடாநாட்டில் ஒன்றிணைந்த தபால் சேவைக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் புதன்கிழமை ஆரம்பமாகின.

யாழ். செயலகத்தில் இயங்கும் வேலை வங்கி மூலம் குடாநாட்டில் உள்ள சகல திணைக்கள வெற்றிடங்களையும் நிரப்புமாறு ஜனாதிபதி விடுத்த பணிப்புரையையடுத்து -

யாழ். செயலக வேலை வங்கியில் இருந்து 100 பேரின் பெயர் விவரங்கள் தபால் திணைக்களத்துக்கு அனுப்பப் பட்டிருந்தன.

இந்தப்பட்டியலில் இருந்து நேர்முகப் பரீட்சைக்குஅழைக்கப்பட்டோருக்கான நேர்முகப் பரீட்சைகளே புதனன்று ஆரம்பமாகின.

இதே வேளை — யாழ். தபால் திணைக்களமும் இந்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்களைக்கோரி இருந்ததும்-

கிடைத்த விண்ணப்பங்கள் பட்டியல் இடப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டதும் தெரிந்தவையே. (இ-3)

## பயிலுநர் ஆசிரியர் நியமனம் குறித்துப் பூரண அறிக்கை

### ஜனாதிபதி கோரி உள்ளார்

கொழும்பு, நவ. 02 பயிலுநர் ஆரம்ப ஆசிரியர் நியமனத்திற்காக கடந்த பெப்ரவரியில் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்படாத நிலையில் கடந்த மாதம் நடைபெற்ற நேர்முகப் பரீட்சை தொடர்பாக பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்விச் சேவைகள் ஆணைக்குழு செயலாளருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலக சிரேஷ்ட உதவிச் செயலாளர் ரி. ஏ. சுமணதிஸ்ஸ மட்டக்களப்பு மாவட்ட ஈ. பி. டி. பி. பிரதம அமைப்பாளர் அ. இராசமாணிக்கம் எம். பிக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இத்தகவலை அறிவித்துள்ளார்.

நேர்முகப்பரீட்சை நடைபெற்று ஒரு வாரத்தின் பின்பே போட்டிப்பரீட்சை முடிவுகள் வெளியாகின. கூடிய புள்ளிகள் பெற்றவர்கள் புறக்கணிக்கப்பட்டு குறைந்த புள்ளிகள் பெற்ற சிலரும் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது. எனவே ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப் பரீட்சையை ரத்துச் செய்து வெற்றிடங்களின் அளவுக்கேற்ப தகுதியானவர்களை தெரிவு செய்து மீண்டும் நேர்முகப்பரீட்சையை அந்த அந்த மாவட்டங்களில் நடத்துமாறு ஈ.பி.டி.பி பிரதம அமைப்பாளர் ஜனாதிபதியிடம் முறையிட்டிருந்தார். (இ-3)

## இளைஞனின் சடலம் மீட்பு

வவுனியா, நவ. 2 மன்னார் ஆஸ்பத்திரி வீதியில் தலையில்லாத ஆணின் சடலம் ஒன்று கடந்த திங்களன்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

35 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவரின் சடலமாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர். [இ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண் தேவை

யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள இளைஞர் ஒருவருக்கு ஒளியேற்ற அவசரமாகக் கண் ஒன்று தேவைப்படுகிறது. வழங்குவோருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**இல: 182, நாவலர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(43453)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 17 — 02 — 1919



மறைவு: 15 — 11 — 1995

### அமரர் பூ. சு. நடராசா

திதி; 02 — 11 — 1996

எங்கள் அன்புத் தெய்வமே!
குரும்பசிட்டியிற் பிறந்து நல்லூரில் வாழ்ந்து
சாவகச்சேரியில் மரணித்தீர்கள்!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவே
நாளும் நெஞ்சில் நிற்கிறதையா!
ஓராண்டு மறைந்தாலும் ஓராயிரம் ஆறுகள்
நிரம்பிடும் கண்ணீருடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்தித்து நிற்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை 02 - 11 - 1996 அன்று கொழும்பு நகரில் ரொறிங்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் காலை 11.00 மணிக்கு நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் மறைவால் துயருறும்,

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

68, மருதடி வீதி,
நல்லூர்.

(சி/ 3373)

## வழக்கறிஞர் சங்கத் தலைவர்

பேர்லின் நவ, 2

இலங்கையைச் சேர்ந்த ஜனாதிபதி சட்டத்தரணி டெஸ்மன்ட் பெர்னாண்டோ பேர்லினில் அண்மையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் சர்வதேச வழக்கறிஞர் சங்கத்தில் தலைவராகப் பதவி ஏற்றார்.

சுமார் 25 லட்சத்துக்கும் அதிகமான வழக்கறிஞர்களை இச்சங்கம் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. (இ10)

## தலைமைத்துவ பயிற்சி

வடமராட்சிப் பகுதியிலுள்ள 35 பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி இன்றும் நாளையும் மெதடிஸ்த உயர்தர பெண்கள் பாடசாலையில் நடைபெறும். (இ-118)

## இடம் பெயர்ந்தோர் அ. அட்டை

வலிகாமம் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி பிரதேசத்தில் தங்கியிருந்த வேளையில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த சிலரின் தேசிய அடையாள அட்டைகள் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு வந்துள்ளன.

இவர்களின் நிரந்தர முகவரி அடையாள அட்டையில் குறிப்பிடாததால் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்கள் பிரதேச செயலகத்துடன் அல்லது தாம் தங்கியிருந்த பகுதி கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் சுந்தரம்பிள்ளை கோரி உள்ளார். (இ-117)

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது.)
கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

### பதவி வெற்றிடம்

பதவி: கணக்குப்பதிவாளர் 165/88 - 12
வேதனம்: 885 - 30 X 7 - 40 X 8 - 1, 385

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட படிகள் அனைத்தும் வழங்கப்படும்.

*கல்வி மற்றும் தகைமைகள்:*

அ) கூ. ச. ஊ. 13 ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்குப் பதிவியல் அல்லது கணக்கு அலுவல்கள் பற்றிய பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 14 ஆம் சம்பளத்திட்டத்தில் கணக்கு அலுவல்கள் பற்றிய பதவியொன்றில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராட்சிய கணக்குப் பதிவியலாளர் நிறுவன மத்திய பரீட்சையில் சித்தி.

அல்லது

இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் உயர்தரம் / க. பொ. த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தி.

*வயதெல்லை:*

வயது 23க்கும் 40க்கும் உட்பட்டதாக இருக்க வேண்டும். (தற்போது கூட்டுறவு ஊழியராக இருப்போருக்கு இந்த நியதி பொருந்தாது)

*வசிப்பிடத் தகைமை:*

குறைந்த பட்சம் 2 வருடங்களாவது யாழ் மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

*பிணைப்பணம்:*

கூ. வே. ஆணைக்குழு சட்டத்திற்கமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

*உள்ளடக்கப்பட வேண்டியவை:*

கல்வி, பிறப்பு, நற்சான்றுப் பத்திரங்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி

**20 - 11 - 1996**

விண்ணப்பம் சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்திலேயே விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்படிவத்தினை நேரடியாக அலுவலக நேரத்திலோ அன்றி சுய முகவரியிட்ட முத்திரை ஒட்டிய கடித உறையையும் ரூபா 10/-க்கான காசுக் கட்டளையையும் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பொது முகாமையாளர்

(சி-3396)

## பருத்தித்துறை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

### 1997 ஆம் ஆண்டு

### இறைச்சிக்கடைகள், சந்தைகள் குத்தகை.

கேள்விப் படிவம் வழங்கல் தலைமை அலுவலகம் — 14 - 11 - 96 ஆம் திகதி பி. ப. 3-00 மணி வரை
கேள்விப் படிவம் ஏற்றல் தலைமை அலுவலகம் — 15 - 11 - 96 ஆம் திகதி பி. ப. 2-00 மணி வரை
கேள்விப் படிவம் திறத்தல் தலைமை அலுவலகம் — 15 - 11 - 96 ஆம் திகதி பி. ப. 2-30 மணி

| குத்தகை விவரம் | ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஆக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| **மாட்டிறைச்சிக் கடை** | | | |
| 1. மந்திகை மாட்டிறைச்சிக் கடை | 1,50,000-00 | 3,000-00 | 150-00 |
| 2. மானாண்எடி மாட்டிறைச்சிக் கடை | 50,000-00 | 3,000-00 | 150-00 |
| 3. மணற்காடு ,, | 5.000-00 | 1,000-00 | 150-00 |
| 4. நாகர் கோவில் ,, | 5,000-00 | 1,000-00 | 150-00 |
| 5. செம்பியன்பற்று ,, | 5,000-00 | 1,000-00 | 150-00 |
| 6. தாளையடி ,, | 5,000-00 | 1,000-00 | 150-00 |
| **ஆட்டிறைச்சிக் கடை** | | | |
| 1. மந்திகை ஆட்டிறைச்சிக் கடை | 10,000-00 | 1,500-00 | 150-00 |
| 2 புலோலி ,, | 15,000-00 | 1,500-00 | 150-00 |
| 3. அல்வாய் நாவலடி ,, | 20,000-00 | 1,500-00 | 150-00 |
| 4. கெருடாவில் ,, | 5,000-00 | 1,500-00 | 150-00 |
| **சந்தைகள்** | | | |
| 1. மந்திகைச் சந்தை | 60,000-00 | 1,500-00 | 150-00 |
| 2. மானாண்டி சந்தை | 6,000-00 | 1,500-00 | 150-00 |
| 3. கெருடாவில் சந்தை | 1,000-00 | — | 150-00 |
| 4. கற்கோவளம் சந்தை | 8 000-00 | — | 150-00 |
| 5. மருதங்கேணி சந்தை | 4,000-00 | — | 150-00 |

கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகம், குடத்தனை உப அலுவலகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


ஆ. சிவசுவாமி,
விசேட ஆணையாளர்,
பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.

பருத்தித்துறை பிரதேசசபை,
புலோலி.
30 - 10 - 1996

(சி-3392)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 17 — 08 — 1953



அப்பாள் அடியில்: 29 — 10 — 1991

### அமரர் ஆறுமுகம் குகதாசன்

(சிவம்)

திதி: 2 - 11 - 1996

பத்தைமேனியைப் பிறப்பிடமாகக் கொண்டவரான மிருசுவில் கண்ணகை அம்மன் கோயிலில் அமரத்துவம் அடைந்த மகனே!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

பப்பா, அம்மா, பிள்ளைகள், சகோதரர்,
சகோதரிகள், மருமக்கள், மச்சான்மார்,
குடும்ப நண்பன் சந்திரதேவா குடும்பம்,
சாரதி தாத்தா.

பத்தைமேனி,
அச்சுவேலி.

(43432)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. முகாம் தாக்குதல் மூலம் கிடைத்திருக்கும் பெறுபேறுகள்!

முல்லைத்தீவு முகாம் அழித்தொழிப்புத் தாக்குதலினால் விடுதலைப் புலிகள் சாதித்தது என்ன?

★ ஈழ விடுதலைப்போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையான படையினர் முதல் தடவையாக கூண்டோடு அழிக்கப்பட்டிருக்கின்றனர்.

★ பெருந் தொகையான ஆயுதங்கள், வெடிப்பொருள்கள் - பலகோடி ரூபா பெறுமதியானவை - புலிகளால் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

★ படைத்தரப்புக்கு உளவியல் ரீதியான அதிர்ச்சி வைத்தியம் புலிகள் செய்திருக்கின்றார்கள்.

★இராணுவ ரீதியில் தமது

## பகுதி - 12

பலத்தை மீண்டும் விடுதலைப் புலிகள் நிரூபித்து இருக்கிறார்கள். வேறு வகையில் கூறுவதானால் யாழ் குடாநாட்டில் பாரிய மோதல்கள் இன்றி தாங்கள் பின்வாங்கியது தமது யுத்தத் தந்திரோபாயம் என்று உணர்த்தி இருக்கிறார்கள்.

★ தாம் நினைத்தால் அரசுப் படைகளின் ஆகாய, கடல் மார்க்க தரையிறக்கத்தை ஓரளவு தடுத்து முறியடிக்க முடியும் என்பதைப் புலிகள் ருசுப்படுத்தியிருக்கின்றார்கள்.

★ படையினரின் வடபகுதிக்கான கடல் போக்குவரத்தை பாதிப்புறச்செய்திருக்கின்றார்கள்; வடபகுதி விநியோகப் பாதையில் பெரும் சீர்குலைவை ஏற்படுத்தியுள்ளனர்.

★ பெரிய கடற்படை அணிகளின் நகர்வுக்கு எதிராக கடற்கரும்புலிகளின் - கடற்புலிகளின் - செயற்பாடுகளை களத்தில் திறம்படச் செய்து காட்டி கடற்புலிகளின் கடல் வலிமையை அல்லது கடலாதிக்கத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்.

★ இவை எல்லாவற்றுக்கும் மேலாக கடந்த ஆறாண்டு காலத்தில் — இரண்டாம் ஈழப்போர், மூன்றாம் ஈழப் போர் காலத்தில் - முதல் தடவையாக-தமிழ்ப் பிரதேசத்தின் ஒரு பகுதியை அரசின் பிடியிலிருந்து விடுவித்திருக்கிறார்கள்; முல்லைத்தீவு மாவட்டம் அரசுப் பிடியிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்டிருக்கின்றது.

★ ஒன்றோடு ஒன்று தொடர்புபட்டதாக உள்ள முகாம்களைப் போலல்லாமல் — தனித்து விடப்படும் முகாம்கள்— புலிகளின் அதிரடிக்கு இரையாவது தவிர்க்க முடியாததாகும் என்பது அரசுக்கு உணர்த்தப் பட்டிருக்கின்றது. இதன் காரணமாகவே பூநகரி முகாம் இவ்வளவு விரைவாக மூடப்பட்டு வாபஸ் பெறப்பட்டது.

— இவ்வாறு முல்லைத் தாக்குதல் மூலம் புலிகள் பலவற்றைச் சாதித்ததாக இராணுவ ஆய்வாளர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

### அரசுத் தரப்பின் பதிலடி!

புலிகளின் இத்தாக்குதல் நடவடிக்கைக்கு அரசுத் தரப்பு கொடுத்த பதிலடி என்ன?

யாழ் குடாநாட்டுச் சமரின் பின்னர் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தனது இராணுவ வலிமை குறித்து ஸ்ரீலங்கா அரசு பெரிதாகப் பேசிக் கொண்டது யுத்தத்தில் திறமை வாய்ந்த அரசு என்ற 'இமேஜை' யும் அது இக்கால கட்டத்தில் கட்டி எழுப்பிக் கொண்டது. அந்த இமேஜுக்குபாதிப்பு உண்டாக்கும் விதத்தில் முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதல் நடத்தப்பட்டது எனலாம்.

எனவே சரிந்து விழுந்து கொண்டிருந்த இமேஜை தூக்கி நிறுத்த-முல்லைத்தீவுத் தோல்வியைச் சமாளிக்க— அரசு புதிய திட்டம் ஒன்றை வகுத்தது.

முல்லைத்தீவு முகாம், தாக்குதலுக்கு இலக்காக முன்னர் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி நோக்கி பெரும் படை நகர்வு ஒன்றை ஆரம்பித்து, புலிகளின் கடும் எதிர்ப்பால் அந்த நகர்வை இடையில் கைவிட்ட அரசு, அந்தத் திட்டத்தையே வேறு வடிவத்தில் செயற்படுத்தத் தயாரானது.

முல்லைத்தீவு முகாம் தாக்குதலில் புலிகளின் கவனம் திசை திரும்பியிருக்கும் போது, ஆனையிறவிலிருந்து கிளிநொச்சியை நோக்கி ஒரு பெரும் படை நகர்வை மேற்கொண்டால், ஆனையிறவு, பரந்தன் பகுதிகளில் புலிகளின் எதிர்ப்பு பலமாக இருக்காது. அதனைப் பயன்படுத்தி இலகுவாக கிளிநொச்சியைக் கைப்பற்றி விடலாம்.

அதேவேளை, முல்லைத்தீவு வீழ்ச்சியால் ஏற்பட்ட "இமேஜ்'' சரிவை, கிளிநொச்சி நடவடிக்கை மூலம் ஈடுகட்டிவிடலாம்.

அரசு போட்ட இந்த இரண்டு கணக்குகளும் பிழைக்கவில்லை

புலிகளின் எதிர்ப்பு முன்னையது போன்று தீவிரமானதாக இல்லாததால் கிளிநொச்சியைப் பிடிப்பது அரசுப்படைகளுக்கு இலகுவாயிற்று.

அதேவேளை—

முல்லைத்தீவு வீழ்ச்சி பற்றிய தகவல்களை அமுக்கி - வாசித்துக் கொண்டு, கிளிநொச்சி மீதான படையெடுப்பை பெரிதாகப் பிரசாரம் செய்தால் தெற்கிலும் அரசுக்கு— அரசுப்படைகளுக்கு— எதிரான போக்கை ஓரளவு சமாளித்தாயிற்று.

ஆனையிறவு முகாமிலிருந்து படைநகர்வு ஆரம்பித்து படைகள் பரந்தனைத் தாண்டும் போது, முல்லைத்தீவு முகாம் நோக்கி நகர்ந்த மீட்பு அணிகளும் முல்லைத்தீவு தளத்துக்குள் பிரவேசித்து விட்டன. இரண்டும் ஒரே நேரத்தில் இடம்பெற்றமைக்குக் காரணம் ஒருபுற வீழ்ச்சி பெரிதாக வெளியே தெரியவரும் போது மறுபுற உயர்ச்சியை பகிரங்கப்படுத்தி சமாளிப்பதற்குத் தான்.

முல்லைத்தீவுத் தளத்தில் படைகளுக்கு எவ்வளவு பொருள், உடைமை இழப்பு ஏற்பட்டதோ அதைப் போல பல மடங்கு இழப்பு கிளிநொச்சியில் பொதுமக்களுக்கு ஏற்பட்டது.

ஏகாந்தமாக இருந்த முல்லைத்தீவுத் தளத்திலிருந்து படைகளை இல்லாமல் செய்ததால் இன்று அங்கு மக்கள் குடியேறியிருக்கின்றார்கள்.

ஆனால் மக்கள் செறிவாகக் குடியிருந்த கிளிநொச்சி மீது படைகள் பெரும் நடவடிக்கை எடுத்ததால் மக்கள் வெளியேற நேர்ந்தது. பின்னர் ஏகாந்தமான ஓரிடத்தை படைகள் இன்று கைப்பற்றி இருப்பதால் பெரும் பயன் ஏதாவது ஏற்குமா என்ற கேள்வி இராணுவ வட்டாரங்களிலேயே கேட்கப்படுகிறது;

(முற்றும்)

தொகுப்பு: கவி



படையினர் கிளிநொச்சியைக் கைப்பற்றிய பின்னர் காணப்படும் கிளிநொச்சி நகரம்.

## நம்பிக்கையில்லா தீர்மானம்

கொழும்பு, நவ. 2

வடமத்திய மாகாணம், ஊவா மாகாண ஆளுநர்களுக்கு எதிராக இம்மாத இறுதிக்குள் நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டு வரப்படவுள்ளன.

## மொரட்டுவை பல்கலை. பரீட்சை அனுமதி அட்டை

கொழும்பு, நவ. 2

மொரட்டுவை பல்கலைக் கழக 'தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா' (N. D. T.) கற்கை நெறிக்கான பிரவேசப் பரீட்சை இம்மாதம் 23ஆம் திகதி மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான அனுமதி அட்டைகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் வேறோர் அனுமதி அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை பிரதேச பரீட்சார்த்திகளின் பெயர் விவரங்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலிருந்து அழைக்கப்பட்ட 20 மாணவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

ரி. சதீஸ்ரமணன்— (யாழ்ப்பாணம்), கே. ஜெயகாந்தன் —(கொக்குவில்,)எஸ்.மதனன் — (கச்சாய் வீதி,) ரி. முகுந்தன் — (பருத்தித்துறை),- ரி. ஜெயகிருஸ்ணன்— (சுன்னாகம்), ஆர். சசிக்குமார் — (தாவடி), எஸ். சுதர்சன்— (உரும்பிராய்), எஸ். சசிக்குமார்— (உரும்பிராய் கிழக்கு), எஸ். இளங்கோ —(இளவாலை), எஸ். குகனேசன் — (சித்தங்கேணி), வி. பாலராஜ் — (சங்கத்தானை), எஸ். புஸ்பநாயகம் — (காரைநகர்) பீ. சுரேஸ் கண்ணா — (அல்வாய்) கே. சுதர்சனா — (கரவெட்டி), ரீ. தங்கவேல் — (கொடிகாமம்), எஸ். உமாஜோகீசன் — (சங்கத்தானை)' கே. பிரதாபன் — (கோண்டாவில்), ஜி. சிவகுமார்— (கந்தர்மடம்), பி. ஸ்ரீகாந்தன் — (தம்பசிட்டி), ரீ. கேதீஸ்வரன் — (வெள்ளாந் தெரு). [இ-ரி]

## தனித்தனி விசாரணை மன்றங்களை ராணுவமும் கடற்படையும் நியமித்தன

முல்லைத்தீவுவீழ்ச்சிகுறித்து விசாரிப்பதற்காக மூன்று அதிகாரிகளைக் கொண்ட இராணுவ விசாரணை மன்றம் ஒன்றை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்தை நியமித்தார்.

மேஜர் ஜெனரல் பட்ரிக் பெர்னான்டோ தலைமையிலான இக்குழுவில் மேஜர் ஜெனரல் ஈ. எச் சமரதுங்க, பிரிகேடியர் காமினி ஹெட்டியாராய்ச்சி ஆகியோர் ஏனைய உறுப்பினர்கள்.

ஆரம்பத்தில் முல்லைத்தீவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தோல்வியடைந்தது ஏன்? எப்படி? — என்ற விவரங்களை ஆராயும்படி மட்டுமே இந்த விசாரணை மன்றம் கேட்கப்பட்டது. ஆனால் பின்னர் இந்த முகாம் வீழ்ச்சியில் இழக்கப்பட்ட ஆயுத, தளபாடங்களை மதிப்பீடு செய்யும் பணியும் இந்த விசாரணை மன்றத்துக்கு ஒப்படைக்கப்பட்டது.

கொழும்பிலும், அநுராதபுரத்திலும் தனது விசாரணைகளை இந்த விசாரணை மன்றம் நடத்தியது.

முல்லைத்தீவு முகாமிலிருந்து தப்பிய படையினரே பெரும்பாலும் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருவிதமான அனுபவம் இருந்தது. அவற்றினிடையே பல முரண்பாடுகள் இருந்ததையும் விசாரணை மன்றம் அவதானிக்கத் தவறவில்லை.

முல்லைமுகாம் வீழ்ச்சி தொடர்பாக கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் மொஹான் சமரசேகரா தனியாக கடற்படை விசாரணை மன்றை நியமித்திருக்கின்றார்.

முதலில் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி றியர் அட்மிரல் எச். ஏ. ஸி. ஏ. திஸேரா இந்த விசாரணை மன்றத்துக்குத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

பின்னர் அவரது இடத்துக்கு புதிய தலைவராக வெலிசறை கடற்படைப் பிரிவின் தலைவரான கப்டன் ரி. எஸ் ஜி. சமரசிங்க நியமிக்கப்பட்டார். கடற்படை விநியோகப் பகுதி பிரதி இயக்குநர் கப்டன் அபேக்கூன் பண்டா இந்த நீதிமன் [illegible] ராவார். ★

## இலவசமாகக் கோழிக்குஞ்சு

வலிகாமம் தெற்கு, நவ. 2

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட பகுதிகளில் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் 84 பயனாளிகளுக்கு இலவசமாக கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

காப்பரணுக்கு உள்ளே உள்ள 37 பயனாளிகளுக்கு கால்நடை வைத்தியர் அலுவலகத்திலும், காப்பரணுக்கு வெளியே உள்ள 47 பயனாளிகளுக்கு வலி - தெற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்திலும் வைத்து கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டன.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு தலா 28 கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்பட்டன. (இ- 152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள 'மொறிஸ் ஒக்ஸ்பேட்' கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr K. T. சிவபாதம், டச்சுறோட், சாவகச்சேரி. (சி/3382)

### தவறிவிட்டது

தமபிப்பிள்ளை சந்திரா தேவி என்பவரின் 6906041822 V இலக்க தேசிய அடையாள அட்டை கம்பஸ் லேன் – நல்லூருக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திரு. எஸ். தேவராசா, சந்திரவாசா, கம்பஸ் லேன், திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (43435)

மகாஜனாக் கல்லூரி மாணவன் சண்முகராசா சருசன் என்பவரின் விசேட அடையாள அட்டை உடுவில் - மானிப்பாய் வீதியில் தொலைந்து விட்டது. இதனைக் கண்டெடுப்பவர்கள் மகாஜனாக் கல்லூரியில் ஒப்படைக்கவும். (43445)

பெ. அருள்ராஜன், 4 ஆம் வருட மருத்துவபீட மாணவனாகிய எனது நீலநிற மாணவர் பதிவேடு (Student Record Book) ஆஸ்பத்திரி வீதி - பிறவுண் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவும். (43448)

மீசாலை தெற்கு, கணபதிப்பிள்ளை கிருஷ்ணசாமி ஆகிய எனது 422771192V இலக்க அடையாள அட்டை சாவகச்சேரி சந்தையில் கடந்த சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாவகச்சேரி கல்பனாஸ் புடைவையகத்தில் ஒப்படைக்கவும். (சி/3394)

### ''திருக்குறள்''

தெய்வப்புலவர் தந்த திருக்குறளை தினம் ஓதி வளமுடன் வாழ்வோமாக. க. கனகராசா ''திருக்குறள் செம்மல்'' குறளியம். (சி/3384)

### புத்தகப்பிரியர்களே

தென்மராட்சியில் பல அரிய நூல்களை இரவல் பெற்று வாசிக்க நாடுங்கள்: லிங் லெண்டிங் லைப்ரரி (Ling-Lending Library), இல: 41, தபாலக வீதி, சாவகச்சேரி. (43084)

### A/L பௌதிகவியல்

1996 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு துரித மீட்டல் வினாவிடை பிரத்தியேக வகுப்புகள் 1-11-1996 இல் ஆரம்பம். ஆசிரியர் திரு. ஸ்பெல்மன், இல 18; மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்ஸ் கல்லூரி அருகாமையில்.) (43426)

## அறிவித்தல்
## வட இலங்கைச் சங்கீதசபை
## வருடாந்தப் பொதுக் கூட்டம் - 1996

மேற்படி சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 1996–11–30 ஆம் நாள் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யா/ நல்லூர் தெற்கு விக்னேஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும். பொதுச்சபை உறுப்பினர்கள் 1995, 1996 ஆம் ஆண்டுகளுக்கான சந்தாப் பணத்தை 1996–11–10 ஆம் திகதிக்கு முன் யாழ்ப்பாணம் வலயம் 1 கல்வித்திணைக்களத்தில் இயங்கும் வட இலங்கைச் சங்கீத சபை அலுவலகத்தில் செலுத்தி உரிய பற்றுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ளவும். முன்னைய நிலுவைச் சந்தா இருப்பின் அவற்றையும் செலுத்தி உறுப்புரிமையை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

இ. சிவானந்தன்
கல்விப்பணிப்பாளரும், வட இலங்கைச்
சங்கீதசபைத் தலைவரும்.
(சி/3387) யாழ் வலயம் - 1.

## வடமாகாண ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்
(N. P. T. P. S. Ltd.)

62 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டமும்
வைரவிழா மலர் வெளியீடும்
திரு. சே. சிவராஜா
செயலாளர் திரு. வி. ஸ்ரீசத்திவேல்
ஆகியோரின் பாராட்டு விழாவும்

காலம்: **9 – 11 – 96** சனிக்கிழமை
மு ப. 10-30 மணி.
இடம்: வைத்தீஸ்வரக் கல்லூரி மண்டபம்

(இடப் பெயர்வு காரணமாக நிரந்தர முகவரி பெற முடியாமையினால் அங்கத்தவர்களே! இதனை அழைப்பாக ஏற்று தவறாது வருகை தாருங்கள்.)

விழாக் குழுவினரும்,
அ ஜெயராஜன் நிர்வாக சபையும்.
தலைவர்
31-10-96 (43441)

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி

## எரிபொருள் நிலைய சுத்திகரிப்பு நிலையத்திற்கான உபகரணங்கள் பெறல்

மேற்படி எமது சங்கத்தினால் நடத்தப்படும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருக்கும் சுத்திகரிப்பு நிலையத்திற்குக் கீழ்வரும் பொருள்கள் தேவைப்படுகின்றன. இவற்றினை வழங்கவிரும்புவோர், பொது முகாமையாளர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சாவகச்சேரி என்ற முகவரிக்கு 06 - 11 - 96 ற்கு முன் விலை விவரம் ஆகியவற்றுடன் அனுப்பி வைக்கவும்.

1) வாகனம் தூக்கி 7 தொன்
2) வாகனம் கழுவும் கருவி
3) காற்றடிக்கும் கருவி
4) கிறீஸ் அடிக்கும் கருவி.

பொது முகாமையாளர்
சாவ- ப. நோ. கூ. சங்கம்
சாவகச்சேரி.

(சி/3390)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 13 | 03 |
| 05 | 10 |
| 1924 | 1996 |

அமரர்
### திருமதி நன்னியர் இராசம்மா

பத்துத் திங்கள் சுமந்தனையே
பரிவாய்க் கடமைகள் செய்தனையே
நித்தம் எம்மைக் காத்தனையே
நிறைவாய் இறையடி சேர்ந்தனையே

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

அளவாவோடை,
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். (8950)

## அறிவித்தல்

### தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
### கைதடி. (மட்டுப்படுத்தப்பட்டது)
## கிளைக் குழுத் தேர்தல் - 1996

மேற்படி சங்கத்தில் கிளைக்குழுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் உதவித் தேர்தல் உத்தியோகத்தர்களால் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் வைத்து பின்வரும் விவரப்படி **08 - 11 - 96, 09 - 11 - 96** ஆம் திகதிகளில் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

| கிளை இல: | பெயர் | நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் திகதி |
|---|---|---|
| 1 | கைதடி வடக்கு | 08 - 11 - 1996 |
| 2 | கைதடி மத்தி | 08 - 11 - 1996 |
| 3 | கைதடி மேற்கு | 08 - 11 - 1996 |
| 4 | கைதடி தெற்கு | 08 - 11 - 1996 |
| 5 | நாவற்குழி | 08 - 11 - 1996 |
| 6 | கோயிலாக்கண்டி | 08 - 11 - 1996 |
| 7 | கைதடி நாவற்குழி | 09 - 11 - 1996 |
| 8 | மறவன்புலோ | 09 - 11 - 1996 |
| 9 | தனங்கிளப்பு | 09 - 11 - 1996 |
| 10 | கைதடி நாவற்குழி தெற்கு | 09 - 11 - 1996 |
| 11 | கோயிலாக்கண்டி மத்தி | 09 - 11 - 1996 |

நியமனப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளும் நேரம் :
காலை **9** மணி முதல் **10** மணி வரை
ஆட்சேபனைகள் ஏற்றுக் கொள்ளும் நேரம் :
காலை **10** மணி முதல் **11** மணி வரை
(இலங்கை நேரம்)

போட்டி ஏற்படும் கிளைகளில் தேர்தல் நடைபெறும் திகதிபற்றிப் பின்னர் அறிவிக்கப்படும்.

பொ. சிவலிங்கம்
தேர்தல் உத்தியோகத்தர்.

பிரதேச செயலகம்
சாவகச்சேரி.
01-11-1996 (சி/3388)

## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 03 - 04 - 1928 | 03 - 10 - 1996 |

நுணாவில் குளம் கண்ணகை அம்மன் தேவஸ்தான உபதலைவரான

### அமரர் செல்லையா நடராசா

அவர்களின் திடீர் மறைவை அறிந்து வேதனையும், கவலையும் அடைவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, ஆத்மா அம்பிகையின் பாதாரவிந்தங்களில் சேரும் வண்ணம் கண்ணகை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை.
(43447)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# முன்னுரிமை எதற்கு?

இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர் ராட் ஹாம் நேற்று முன் தினம் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்திருந்தார். யாழ்ப்பாணக் குடாநாடு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர், இங்கு விஜயம் செய்த இரண்டாவது வெளிநாட்டுத் தூதுவர் ராட் ஹாமே ஆவார்.

எனினும் அவர் இங்குள்ள நிலைமைகளை சரிவரக் கண்டறிய வாய்ப்புக் கிடைத்திருக்காது. மக்களைச் சந்தித்து தகவல்களைப் பெறவும் சந்தர்ப்பம் இருந்திருக்காது. காரணம், தமது நாடு உதவி வழங்கவிருக்கும் சில குறிப்பிட்ட திட்டங்கள் குறித்த விவரங்களை அறிந்து கொள்வது மட்டுமே அவரது வருகையின் நோக்கமாக இருந்தது.

அவரைச் சந்திக்க ஆவலுடன் யாழ். செயலகத்தில் கூடிய பெற்றோர்கள் — இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட இளைஞர் யுவதிகளின் பெற்றோர்கள்— அவரைச் சந்திக்க முடியவில்லை.

யாழ். செயலகத்தில் நடைபெற்ற அரசாங்க அதிகாரிகள் கூட்டம் ஒன்றில் தமது அரசு உதவவிருக்கும் திட்டங்கள், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான தேவைகள் குறித்து ஆராய்ந்தமை, கலந்துரையாடியமை; சம்பந்தப்பட்ட திட்டங்கள் அமையவுள்ள ஆஸ்பத்திரி, சுன்னாகம் மின்சக்தி நிலையம், காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை மின் நிலையம் ஆகிய இடங்களையே அவர் பிரதானமாக நேரில் சென்று பார்த்தார்.

குறிப்பிட்ட ஒரு நோக்கத்துடன் வந்து அதனை முடித்துக் கொண்டு திரும்பியதாகவே பிரிட்டிஷ் தூதுவரின் விஜயம் அமைந்தது. அதனால் இங்குள்ள மக்களின் நிலைமையை முழு அளவில் அறிந்து கொள்ள அவருக்கு வாய்ப்பிருந்திருக்காது எனலாம்.

எனினும்—

யாழ். செயலகத்தில் நடைபெற்ற திணைக்களத் தலைவர்கள் கூட்டத்தில் அவர் தெரிவித்த கருத்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

குடாநாட்டு மக்களின் வாழ்க்கையை முன்னேற்ற நாம் உதவத் தயாராக இருக்கிறோம். பாதுகாப்பு, சமாதானம் ஆகியவற்றின் வளர்ச்சியிலேயே எமது உதவிகள் தங்கியுள்ளன— என்று அவர் தெரிவித்திருக்கிறார். அதாவது சமாதானமும், பாதுகாப்பும் நிலைத்துவம் அடையாவிடின் தமது நாடு உதவி செய்வது கஷ்டமாக இருக்கும் என்ற அர்த்தம் இதில் தொனிக்கிறது.

பிரிட்டிஷ் தூதுவர் மட்டுமன்றி — பிரிட்டன் மட்டுமன்றி — எந்தவெளிநாடுமே இத்தகைய ஒருநிலைப்பாட்டையே கொண்டிருக்கும். எனவே இதுவிடயத்தை அரசாங்கம் தனது மனதில் நன்றாகப் பதித்துக்கொள்வது மிகவும் முக்கியம்.

குடாநாட்டில் நிரந்தர அமைதியையும், சமாதானத்தையும் நிலைநாட்டுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அதற்கான அரசியல் செயற்பாடுகளில் அக்கறையுடன் இறங்க வேண்டும்.

அஃதில்லையேல் வெளிநாடுகளை முற்றாக நம்பிக்கை கொள்ளச் செய்து, உதவி பெறுவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டதாகவே முடியும்.

# வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கிய பயணிகள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, நவ. 2

வன்னியில் இருந்துவவுனியா சென்றவர்களில் ஒரு பகுதியினர் தாம் நலன்புரி நிலையங்களில் அடைத்து வைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கடந்த வாரம் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

தாம் சுதந்திரமாக வெளியில் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வன்னியில் இருந்து கணிசமான எண்ணிக்கையினர் நாட்டின் தென்பகுதிக்கும் கொழும்புக்கும் செல்வதற்கு வவுனியா வருகின்றனர்.

மருத்துவத் தேவை, தொழில் வாய்ப்புகள், நேர்முகப்பரீட்சை, உயர் கல்வி, வெளிநாட்டுப் பயணம் போன்ற பல்வேறு தேவைகளுக்காக பயணம் செய்பவர்களும், வவுனியா நகருக்கு பொருள்கள் கொள்வனவு செய்வதற்காக வியாபார நோக்கோடு வருபவர்களும் இதில் அடங்கி இருக்கின்றனர்.

இவ்வாறானவர்களும் நலன்புரி நிலையங்களில் வெளியே செல்ல முடியாதவாறு தடுத்து வைக்கப்படுகின்றனர்.

இத்தகையோரே ''நாங்கள் அகதிகள் அல்லர்; பயணிகளான எங்களை, எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளியில் செல்ல அனுமதியுங்கள்'' என்று கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவர்களது நியாயமான கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலீஸார் உறுதியளித்த பின்னர் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் இவர்களின் நிலை குறித்து உயர்மட்ட இராணுவ அதிகாரிகளுக்கு விளக்கிய பின்னர் இவர்களை முகாமில் இருந்து விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## 459 ஆசிரியர் நியமனம்

வடக்கு - கிழக்குப் பாடசாலைகளில் நேற்று முதல் 459 ஆசிரியர்கள் நியமனம் பெற்றுள்ளனர்.

அண்மையில் நடந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே இவர்கள் நியமனம் பெற்றனர். (இ-3)

## ஜனவரியில் ரூ. 400 வரை சம்பள உயர்வு

கொழும்பு, நவ. 2

அரசாங்க ஊழியர்களுக்கு ஜனவரி மாதத்தில் இருந்து 300 ரூபாவுக்கும் 400 ரூபாவுக்கும் இடைப்பட்ட சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

அண்மையில் தொழிற் சங்க பிரதிநிதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது ஜனாதிபதி இதைத் தெரிவித்தார்.

டி.சி. பெரேரா ஆணைக்குழு அறிக்கையின் சிபார்சுகளை 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து முழுமையாக அமுல் செய்வதற்கு ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். (இ-3)

# கைதான ஆசிரியர் எங்கே? ஜனாதிபதிக்கு சங்கம் கடிதம்

கொழும்பு, நவ. 2

இராணுவத்தால் கைது செய்யப்பட்ட ஆசிரியர் நாகமுத்து செல்வரட்ணம் (57 வயது) இருக்கும் இடத்தைக்கண்டுபிடித்து உதவுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளதாவது;

யாழ். மாவட்ட கல்வித் திணைக்களத்தில் இணைக்கப்பட்ட ஆசிரியராக இவர் கடமையாற்றி வந்தார்:

கடந்த ஜூன் மாதம் 14 ஆம் திகதி காலை 8மணிக்கு வழமைபோல இவர் அரியாலையில் உள்ள தனது வீட்டில் இருந்து யாழ். கல்வித் திணைக்களத்துக்கு செல்லும் வழியில் புங்கங்குளம் சந்தியில் உள்ள காவல் நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

இதுவரை இவர் குறித்து தகவல் இல்லை. இவர் குறித்த தகவலைத் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# புலிகளுக்கு ஆயுதங்கள் இறக்கப்பட்டனவா?

## கிழக்குக் கடலில் படையினர் தேடுதல்

கொழும்பு, நவ 02

புலிகளுக்கு ஆயுதங்கள் ஏற்றி வந்ததாகக் கூறப்படும் கப்பல் ஒன்றைத் தேடி விமானப்படையினர் கிழக்குக் கடலில் தேடுதல் நடத்தினர்.

மட்டக்களப்பு பிரதேசக் கடலில் இந்தக் கப்பல் காணப்பட்டதாக திருகோணமலையில் இருந்து அங்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் திருகோணமலை கடற்படையினரிடம் தெரிவித்தனர்.

இதையடுத்தே கடற்படையினரின் வேண்டுகோளுக்கு இணங்க விமானப்படையினர் கடந்த சிலதினங்களாக கிழக்கு கடற்பிரதேசத்தில் இந்தக் கப்பலைத் தேடும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். (இ-3)

# கோப்பாய்ப் பகுதிக்கான விசேட அடையாள அட்டை

## இன்று விநியோகிக்கப்படும்

''வலி - கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் இருபாலை தெற்கு, கல்வியங்காடு, இருபாலை கிழக்கு, கோப்பாய் தெற்கு கோப்பாய் மத்தி, உரும்பிராய் மேற்கு, உரும்பிராய் தெற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் இன்று இருபாலை சந்திக்கு அருகாமையிலும் —

வளலாய், இடைக்காடு, தம்பாலை, கதிரிப்பாய், பத்தமேனி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி மேற்கு, அச்சுவேலி தெற்கு, ஆவரங்கால் கிழக்கு, ஆவரங்கால் மேற்கு, புத்தூர் வடக்கு, நவற்கிரி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் ஆவரங்கால் மேற்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும்—

இன்று சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் வழங்கப்படவுள்ளன.

சம்பந்தப்பட்டவர்கள் தமது கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு தமது பெயர்களை உறுதிப்படுத்திய பின் தமது அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது (இ)

### நாளை

ஐப்பசி 18

ஞாயிற்றுக்கிழமை

திதி: அட்டமி
பின் இரவு 3 03 வரை.

நட்சத்திரம்: பூசம்
பிற்பகல் 1.02 வரை.

ராகுகாலம்: 4.34- 6.04

சுபநேரம்: 9.04 - 10.34

([illegible]
பழைய நேரப்படி)

# வாசகர் திருமுகம்

## ஆசிரியர்கள் நியமனம்

கடந்த 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி நடந்த தமிழ் மொழி மூல ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்றி அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்டேன். இந்த நியமனம் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலும், நாட்டுப்பிரச்சினை காரணமாகவும் 1995 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் நடைபெற்ற மேற்கூறிய பரீட்சையில் என்னைப்போல பலர் தோற்றவில்லை.

எழுதுவினைஞர் பதவிக்கு ஆள்களைச் சேர்ப்பதற்கு 1994, 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமனம் நடக்கும் போது, தமிழ் மொழி மூல ஆசிரியர்களுக்கு மாத்திரம் 95 ஆம் ஆண்டுப் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் மட்டும் நியமனம் வழங்கப்படுவதன் மர்மம் என்ன?

இதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கல்விப்பணிப்பாளர்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருவரா? எமது உள்ளக் குமுறல்களுக்கும் விடை கிடைக்குமா?

இந் நியமனங்கள் வழங்கப்படுவது சம்பந்தமாக புதிது புதிதாகச் செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

ஆகவே சம்பந்தப்பட்டவர்களும், மேலதிகாரிகளும், வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சும் தயவு செய்து இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வா. தேவகி

தும்பளை வீதி, பருத்தித்துறை.

## நேரமாற்றம் வரவேற்கத்தக்கது

புகழ்பெற்ற விஞ்ஞான எழுத்தாளரான ஆர்தர் சி. கிளாக், சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் அப்போதைய அரசுக்கு ஒரு பரிந்துரை விடுத்தார். ''இலங்கையின் நியம நேரம் (Standard Time) கிறீன்விச் நேரத்திலிருந்து ஐந்தரை மணித்தியாலம் முன்பதாக உள்ளது. இதனை ஆறு மணித்தியாலமாக மாற்றி, நியம நேரத்தை அரை மணித்தியாலம் முன் தள்ளி வைக்க வேண்டும். இன்றைய 'எலக்ரோனிக்' யுகத்தில் இந்த மாற்றம் அவசியமானது'' என்பது அவரது கருத்தாகும்.

இந்தியாவும் இந்த மாற்றத்தைச் செய்வது நல்லது. ஆனால் அவர்கள் செய்யாவிட்டாலும் நாம் செய்யவேண்டும் என அவர் கூறினார். ஆனால் அவரின் கருத்தை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. ஐரோப்பியரான ஆர்தர் சி. கிளாக், இலங்கைக் குடியுரிமை பெற்று கொழும்பிலேயே நிரந்தரமாக வாழ்வதோடு, விஞ்ஞானத்துறைக்கு அரிய பல சேவையாற்றி வருகிறார்.

அவரின் கருத்துக்கு அமைய சிங்கப்பூர், மலேஷியா ஆகிய நாடுகள் அப்போதே தமது நேரத்தை அரை மணித்தியாலயத்தால் முன்தள்ளி வைத்து விட்டன. இப்போது அவற்றின் நேரம் கிறீன்விச் நேரத்திலிருந்து எட்டு மணித்தியாலம் முன்பதாக உள்ளது.

முழு உலகுமே இன்று ''இன்றர் நெற்'' மூலமாக இணைக்கப்பட்டுள்ளது. சர்வதேச நகரங்களின் நேரத்தைக் காட்டும் 'எலக்ரோனிக்' பட்டியல்களில் இலங்கை, இந்திய நேரங்களைக் காட்ட முடியாத நிலை. கிறீன்விச் நேரத்திலிருந்து மாறுபடும் வித்தியாச அளவு முழு எண்ணாக அமைய வேண்டும்.

இக் காரணங்களின் அடிப்படையிலேயே ஆர்தர் சி. கிளாக்கின் பரிந்துரை அமைந்தது. இப்போது, என்ன காரணத்தாலோ, அவரது கருத்துக்கமைவான வகையில் நேரம் மாற்றப்பட்டுள்ளது. சர்வதேச நேர ஓட்டத்துடன் ஒன்று கலக்க இது உதவும்.

நேரம் என்பது நாணயம் போல, ஓர் அளவுதான். சூரிய உதயம், அஸ்தமனம் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் நிகழ்வதில்லை. எனவே சூரிய சஞ்சாரத்துக்கும் நேரத்துக்கும் ஒரே இடத்தில் முடிச்சுப் போடக் கூடாது. ஒரு பொருளைப் பத்து ரூபாவுக்கு வாங்குகிறோம். நாளை ரூபா மதிப்புக் குறைக்கப்பட்டால் அதே பொருள் பன்னிரண்டு ரூபாவுக்கு விற்பனையாகும். அது போல சூரிய சஞ்சாரத்தை மாறிய நேரப்படி குறித்துக் கொள்வது இலகுவான மாற்றமே.

இப்போது சிலர் ''10-30 (பழைய நேரம்)'' எனக் குறிப்பிடுகிறார்கள். இது தேவையற்றது. பழைய நேரப்படி 10-30 மணிக்கு 'முகூர்த்தம்' என்று கணக்குப் பண்ணியிருந்தால் அதை இப்போது 11-00 மணி என எழுதலாம் அல்லவா?

இந்த நேர மாற்றத்தை சர்வதேசக் கண்ணோட்டத்தில் நோக்க வேண்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும் காலத்தின் தேவையை ஒட்டியே ஏற்படுகின்றன.

எஸ். உமாகாந்தன்

கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ராணுவ தளபதி சிசிலுக்கு 13 ஆம் திகதிவரை விளக்க மறியல்!

கொழும்பு நவ. 2

ஊழல் குற்றச் சாட்டின் பேரில் நேற்று முன்தினம் கொழும்பு கோட்டை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட முன்னாள் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தினா இம் மாதம் 13 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் வைத்து சி. ஐ. டி. பொலீஸார் அவரைக் கைது செய்தது தெரிந்ததே.

முன்னைய ஆட்சிக் காலத்தில் இராணுவத்துக்காக சிங்கப்பூரில் இருந்து இவரால் கொள்வனவு செய்யப்பட்ட உலர் உணவுப் பொருள்கள் பாவனைக்கு உதவாதவை என்றும் —

படையினர் நோய் வாய்ப்பட்டதால் அவற்றை முழுமையாக அழிக்க வேண்டி இருந்தது என்றும்—

சந்தேகத்துக்கிடமான இந்த கொள்வனவு காரணமாக அரசுக்கு 4 கோடி 30 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டது என்றும் — நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

சிசில் வைத்தியரத்தினாவால் கொள்வனவு செய்யப்பட்ட பொருள் களுக்கு கேள்விப் பத்திரசபையின் அங்கிகாரம் பெறப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)

## அறுபத்தொன்பதாவது அகவையில்

கலாநிதி க. கனகராசா J. P.

(மில்க்வைற் தொழிலதிபர்)

சுறுசுறுப்பான இந்தச் சுந்தரக் கனகராசன்
அறுபத்து ஒன்பதான அகவையில் காலை வைத்தான்
உறுதுணையாக இந்த உலகத்தோடொட்டி வாழ்ந்து
அறிவியல் புகட்டிநின்ற இவன்புகழ் நீடு வாழி!

சுபம்!

தயா அச்சகம்
(சாந்தி குடும்பத்தினர்)

(43451)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் செல்லையா நடராசா

(இளைப்பாறிய C. I D பொலீஸ் உத்தியோகத்தர்)

தோற்றம்: 03 – 04 – 1928

மறைவு: 03 – 10 – 1996

நதியொன்று வற்றிப்போனது;
வாழ்க்கை நந்தவனம் வரண்டு போய்விட்டதே!
ஐயா! உங்கள் கிளையில் பூத்த புஸ்பங்களை
கண்ணீர் மழையில் நனையவிட்டுப்
போனதென்ன?
கானல் தான் வாழ்க்கையென்று காட்டி
நீங்கள் சென்ற பாதையென்ன!
புன்னகை பொதித்த முகம்!
போன வழி தெரியவில்லை.
தென்றலைத் தந்த பொதிகை
சென்ற இடம் தெரியவில்லை.
ஐயா! நீங்கள் திரும்பி வரமாட்டீர்களா?
வரவே மாட்டீர்களா ஐயா?

எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆத்ம சாந்தி வேண்டி நிற்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு.
சாவகச்சேரி.

(43438)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

## மன்னாரில் உணவுப்பொருள் தட்டுப்பாடு

தலைமன்னார், நவ. 2

மன்னார் மாவட்டத்தில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் பெரும்பாலான மக்கள் பேரீச்சம்பழத்தைக் கடித்துக் கொண்டே தேநீர் அருந்தும் நிலை உருவாகியுள்ளது.

கோதுமைமா இல்லாத காரணத்தினால் பாணும் கிடைப்பதில்லை. கடந்த ஒகஸ்ட் மாதத்தின் பின்னர் உணவுப் பொருள்கள் சீராக வராத காரணத்தினால் தட்டுப்பாடு உருவாகியுள்ளது.

இதேநேரம் மன்னார்- கற்பிட்டி படகு சேவையையும் தினமும் நடத்த முடியாமல் உள்ளது. கடற்படையினர் பாதுகாப்பு வழங்கினால் மாத்திரமே படகுசேவையை நடத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக எந்தவொரு அத்தியாவசியப் பொருளையும் மன்னாருக்குக் கொண்டு வரமுடியாதுள்ளது. (இ- 10- 150)

## அரபாத் எச்சரிக்கை

சிரியாவுடன் யுத்தத்தில் ஈடுபட வேண்டாம் என பலஸ்தீனத் தலைவர் யாஸீர் அரபாத் இஸ்ரேலை எச்சரித்துள்ளார். (இ-10)

### வன்னியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் சொல்லப்படுகிறது.

இதற்கிடையில் வவுனியா — கிளிநொச்சி தரைப் பாதையைத் திறப்பதற்கான இராணுவ நடவடிக்கைக்கு முன்னேற்பாடாகவே அரசு வன்னியில் இடம்பெயர்ந்த மக்களை வவுனியாவுக்கு அழைப்பதாகக் கருதப்படுகிறது.

உத்தேச இராணுவ நடவடிக்கை வவுனியாவிலிருந்து கிளிநொச்சியை நோக்கி ஆரம்பிக்கப்படும் என்றும் அனேகமாக இம்மாத இறுதியில் அது ஆரம்பிக்கப்படலாம் என்றும் பரவலாகப் பேசப்படுகிறது. (அ)

### ஜே. ஆர்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கு பாதயாத்திரை செய்தவர் ஜே. ஆர்.

அத்துடன்—

1987 ஆம் ஆண்டு இலங்கை — இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கும் இந்தியப்படை இலங்கைக்கு அனுப்பப்படுவதற்கும் இவர் காரணமாக இருந்தார்.

ஜே. ஆரின் இறுதிச் சடங்குகள் எதிர்வரும் திங்கட்கிழமை அரச மரியாதைகளுடன் நடைபெற உள்ளன. (இ-3-10)

### குடாநாட்டில்—

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நகரப் பகுதி காலையில் இருந்தே மக்கள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் கிடந்தது.

இதே வேளை வெளியூர்களில் நேற்று பல இடங்களில் கடைகள் மூடப்பட்டிருந்ததாகவும், வேறு சில இடங்களில் கடைகள் திறந்திருந்ததாகவும் அறிய வந்தது.

மானிப்பாய், இணுவில், உடுவில் மற்றும் சில பகுதிகளில் மாணவர்களைப் பாடசாலைகளுக்குச் செல்லுமாறு படையினர் ஒலிபெருக்கி [illegible] என்றும் தெரியவந்தது. (அ-3-15-154-90-31-173)



## தென் ஆபிரிக்காவுக்கு இலகுவான வெற்றி

கௌகாட்டி, நவ.2

மூன்று நாடுகள் பங்கேற்கும் ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று கௌகாட்டியில் நடைபெற்ற போட்டியில் தென் ஆபிரிக்கா ஆஸ்திரேலியாவை 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்தாடிய தென் ஆபிரிக்க அணி 45 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது.

தற்போது இந்தியாவுக்கு 3 புள்ளிகளும் ஆஸ்திரேலியாவுக்கு 1 புள்ளியும் கிடைத்துள்ளன. நாளை இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணி ஏற்கனவே இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ள தென் ஆபிரிக்க அணியுடன் 6 ஆம் திகதி இறுதிப் போட்டியில் மோதும். (இ-10)

### புதிய சாதனை

பாகிஸ்தான் கிரிக்கெட் அணித் தலைவர் வாஷிம் அக்ரம் ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியிலும் தலா 300 விக்கெட்டுகளை கைப்பற்றி சாதனை நிலைநாட்டியுள்ளார்.

கடந்த புதனன்று சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சிம்பாப்வே அணியைச் சேர்ந்த டேவிட் ஹூட்டனின் விக்கெட்டைக் கைப்பற்றி இந்தச் சாதனையை அவர் நிலைநாட்டினார்.

இரு வாரங்களுக்கு முன்னர் சிம்பாப்வே அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் 8 ஆவது விக்கெட் இணையாக 313 ஓட்டங்களைப் பெற்றும் 12 சிக்சர்களை அடித்தும் இவர் புதிய சாதனைகளை நிகழ்த்தியிருந்தார். (இ-10)

## 50 ஆம் வருட குருவாழ்வை நிறைவு செய்யும் பாப்பரசர்

தாம் குருவாக திருநிலைப்படுத்தப்பட்ட 50 ஆம் ஆண்டு நிறைவு விழாவை பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் நேற்றுக் கொண்டாடினார்

1946 ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட திருத்தந்தை இதுவரை 1 லட்சத்து 80 ஆயிரம் திருப்பலிப் பூசைகளை நிறைவேற்றியுள்ளார். அத்துடன் 117 நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார்.

திருத்தந்தையின் இயற்பெயர் கரோல்ட் ஒத்திலா என்பதாகும். (இ-10)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 09 — 06 — 1920



உதிர்வு: 14 — 11 — 1995

அமரர்

வேலுப்பிள்ளை செல்லத்துரை

(இளைப்பாறிய அதிபர்)

திதி:— 02 – 11 – 96

அன்பின் ஊற்றே! அறிவின் சிகரமே!
மின்னல் போல் மறைந்தீர்
மிகத்துயர் அடைந்தோம்!
ஒருவருடம் கழிந்தும் ஆற்றாது எம்
மனது வெந்தணல் போல் எரிகின்றது!

என்றும் மறக்க முடியாத பாசநினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்களை நினைவுகூரும்:
அன்பு மனைவி. மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்,
பெறாமக்கள், மைத்துனர்,
உற்றார், உறவினர்.

தகவல்:
சீ. தியாகராசா
புது வீடு,
வல்வெட்டி.

(43457)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 296/[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 02-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org